# தி.மு.க. ஆட்சியின் சாதனைகளால் பயன் பெறாத மக்களே இல்லை!

## சட்டமன்றத்தில் — கழகக் கொறடா எ.வ.வேலு பேச்சு!

**சென்னை, ஆக. 30-**

**சட்டமன்றத்தில் நேற்று நடந்த விவாதத்தின் போது தி.மு.க. கொறடா எ.வ.வேலு பேசியதாவது :-**



இங்கு சோழவந்தான் சட்ட மன்ற உறுப்பினர் பேசும்போது மதுரையில் பென்னிகுயிக் வாழ்ந்த இடத்தை இடித்துவிட்டு கலைஞர் நூலகம் அமைத்ததாக ஒரு செய்தியைச் சொன்னார், அது உண்மை அல்ல,

ஏற்கனவே இதே சட்டமன்றத்தில் அப்பொழுது ஒரு எதிர்க்கட்சி உறுப்பினர் இதே கேள்வி கேட்ட போது பென்னிகுயிக் வாழ்ந்த காலங்கள் எவை எந்தெந்த இடங்களில் வசித்தார் என்று இதே அவையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே காலியாக இருந்த இடத்தில் பாழடைந்த குவாட்டர்ஸ் இருந்த இடத்தில் தான் கலைஞர் நூற்றாண்டு நூலகம் கட்டப்பட்டது தவிர பென்னிகுயிக் வாழ்ந்த இடத்தில் கட்டப்படவில்லை.

அது மட்டுமல்ல மதுரை பகுதியில் தமிழர்களின், குறிப்பாக இளைஞர்களின் அடையாளமாக உள்ள ஜல்லிக்கட்டை பெருமைப் படுத்தும் வகையில் ஒரு அரங்கம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது, அதன்படி தான் ஜல்லிக்கட்டுக்கு என்று ஒரு அரங்கம் அமைக்கப் பட்டது என்பதை இங்கு பதிவு செய்கிறேன்.

அதே நேரத்தில் பென்னிகுயிக் வந்த ஊர் லண்டன், அந்த லண்டன் மாநகரில் பென்னிகுயிக் சிலையை அமைத்து அதனை அப்போதைய அமைச்சர்

ஐ.பெரியசாமி அவர்களை வைத்து திறக்கச் செய்து பெருமை சேர்த்தோம்.

இங்கு அமைச்சர் அவர்கள் பேசும்போது

கடந்த 53 ஆண்டு காலமாக திராவிட இயக்கங்கள் மாறி மாறி ஆட்சி செய்தனர். ஆனால் மருத்துவமனையில் மருத்துவர்கள் இல்லை, போவதற்கு பாதை இல்லை என்ற ஒரு குற்றச்சாட்டை கூறுகிறார்.

நான் கேட்கிறேன் நாங்கள் போடாத ரோட்டிலா போகிறார்கள், நாங்கள் கட்டாத மருத்துவமனையில் அப்பகுதி மக்கள் சிகிச்சை பெறுகிறார்கள், இல்லையென்றால் நீங்கள் ஆட்சிக்கு வந்து 100 நாளில் அனைத்தையும் கட்டி முடித்து விட்டீர்களா என்ற கேள்வியை எங்களாலும் கேட்க முடியும்,

ஒரு சட்டமன்ற உறுப்பினர் கூட தெரியாமல் அவையில் பேசலாம், ஆனால் ஒரு அமைச்சராக இருக்கிறவர்கள் ஒரு குற்றச்சாட்டு சொல்லும் பொழுது இந்த இடத்தில் இல்லை என சொன்னால் பதில் சொல்லலாம், பொத்தம் பொதுவாக மருத்துவமனை கட்டினீர்கள் ஒழுகுகிறது, ஆஸ்பத்திரியில் மருத்துவர்கள் இல்லை ,, எனக் கூறுவது ஒரு அமைச்சருக்கு அழகு அல்ல ..நாங்கள் வந்து நூறு நாட்களில் மருத்துவர்கள் நியமித்து விட்டோம் கம்பவுண்டர்கள் போட்டு விட்டோம், இதனை செய்து விட்டோம் என்று சொன்னால் கூட ஏற்றுக் கொள்ளலாம்.

நீங்களும் ஒரு வருடம் ஆட்சி செய்தால் தான், உங்க நாட்டின் திறனை பார்த்து நாங்கள் குறை சொல்ல முடியும், ஆனால் நாங்கள் தற்பொழுது பத்திரிகைகளில் வரும் செய்தியை மட்டும் தான் மேற்கோள் காட்டுகிறோம்,

தி.மு.க. ஆட்சியில் செய்த சாதனைகளால் மக்கள் ஏராளமான பயன் பெற்றார்கள், இந்தியாவிலேயே பிரபலமான பத்திரிக்கையான இந்தியா டுடே பத்திரிக்கை இந்தியாவில் நம்பர் ஒன் முதல்வர் ஸ்டாலின் என்று குறிப்பிட்டது, இதுதான் திராவிட மாடல் ஆட்சிக்கு கிடைத்த நற்சான்று.

அதேபோல் எந்த ஒரு ஆட்சி வந்தாலும் அந்தந்த ஆண்டில் வருகின்ற வருவாய் வைத்து தான் திட்டங்களை நிறைவேற்ற முடியும், ஆனால் மக்களுடைய தேவைகளை முழுமையாக செய்ய முடியாது, கொஞ்சம் கொஞ்சமாகத் தான் செய்ய முடியும், ஆனாலும் தி.மு.க. ஆட்சியின் போது போடப் பட்ட பட்ஜெட் மக்கள் பாராட்டை பெற்றுள்ளது,

அதேபோல் அஞ்சலையம்மாள் என்ற புகழ்பெற்ற சமூக சேவகிக்கு கூட தி.மு.க. ஆட்சியில் தான் நூலகம் கட்ட நிதி ஒதுக்கப்பட்டு கட்டிடமும் கட்டப்பட்டு வருகிறது, இது போல தி.மு.க. ஆட்சியின் போது ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன, அதை நீங்கள் பாராட்ட வில்லை என்றாலும் , ஒண்ணுமே செய்யவில்லை என்று குறை சொல்லக்கூடாது.

இவ்வாறு அவர் பேசினார்.

**ஓ.பன்னீர்செல்வம்**

அதனையடுத்து முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் குறிப்பிட்டதாவது:-

“திராவிட ஆட்சிக் காலத்தில் என்ன செய்தீர்கள் என்று கேட்கிறார்கள், கடந்த கால தி.மு.க. நல்லாட்சியில் அனைத்து மாநிலங்களையும் விட முதன்மை பெற்ற மாநிலமாக குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், பொருளாதார வளர்ச்சியில் 11.19% எட்டியுள்ளது என்று சொன்னால் அதற்கு காரணம் திராவிட மாடல் ஆட்சியால் ஏற்பட்ட வளர்ச்சி என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்” என்று குறிப்பிட்டார்.

---

### நேபாளத்தில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படக் காரணமான

# பனிப்பாறை வெடிப்பை உறுதி செய்யும் செயற்கைக் கோள் படங்கள்!

## ‘இஸ்ரோ’ வெளியிட்டது!

*புதுடெல்லி, ஆக. 30-*

நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்திற்கு காரணமான பனிப்பாறை வெடிப்பை உறுதி செய்யும் செயற்கைக்கோள் படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்திற்கு நிலநடுக்கம் தான் காரணம் என்று சந்தேகிக்கப்பட்டது. ஆனால், இமயமலையின் பனிப்பாறை உடைந்த அதிர்வுகள் தான் நிலநடுக்க அலைகளாக பதிவாகியிருந்ததாக பின்னர் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், நேபாளத்தில் நேற்று ஏற்பட்ட மிகக் கொடூரமான திடீர் வெள்ளத்திற்கு காரணமாக பனிப்பாறை சரிவு மற்றும் பனிப்பாறை உடைப்புகளை உறுதி செய்யும் செயற்கைக்கோள் படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது. இது குறித்த இஸ்ரோவின் ஆய்வு முடிவுகளின்படி, நேபாள திபெத் எல்லைப் பகுதியில் இருந்த ஒரு குறிப்பிட்ட பனிப்பாறையின் மூன்றில் இரண்டு பங்கு திடீரென தனியாகப் பிரிந்து சரிந்து விழுந்துள்ளது. இந்த பிரம்மாண்ட பனிப்பாறை சரிவு, டன் கணக்கிலான பனி மற்றும் பாறை இடிபாடுகளை பயங்கர வேகத்தில் மலையில் மேல் பகுதியில் இருந்து கீழ்நோக்கி தள்ளியது.

சரிந்து விழுந்த பனி மற்றும் இடிபாடுகள் அங்கிருந்த சிறிய ஆற்றை தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தி, ஒரு அணையைப் போல மாற்றியது. பனிப்பாறையின் அதிவேக உருக்கம் காரணமாக, அந்தத் தற்காலிக அணை உடைந்து, திடீரெனக் கட்டுக்கடங்காத வெள்ளப் பெருக்காகக் கீழ்நோக்கிப் பாய்ந்தது. இதனால் நேபாளத்தின் ரசுவா, ரசுவாகாதி, திமுரே ஆகிய பகுதிகள் மற்றும் ஆறுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வீடுகள், பாலங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் இஸ்ரோ விளக்கம் அளித்துள்ளது. இந்த புகைப்படங்கள் ரிசோர்ஸ் சாட்2ஏ மற்றும் லேண்ட் சாட்9 ஆகிய செயற்கைக் கோள்கள் மூலம் எடுக்கப்பட்டதாகவும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

---

# தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்கள் - மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## அணிச் செயலாளர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

*சென்னை, ஆக.30-*

தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணியின் செயலாளர் டி.ஆர்.பி.ராஜா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணியின் இணைச் செயலாளர், ஆலோசகர்கள், துணைச் செயலாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 1-9-2026 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் அன்பகம் அரங்கில் எனது (அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா) தலைமையில் நடைபெற உள்ளது. மேற்குறிப்பிட்ட நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் பங்கேற்க அழைக்கிறோம். பொருள்-கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு டி.ஆர்.பி. ராஜா அறிவித்துள்ளார்.

---

### அனைத்துத் துறைகளிலும்

# தனியார் மயமாக்கும் போக்கை தமிழக அரசு கைவிட வேண்டும்!

## தொ.மு.ச. செயற்குழு கூட்டத்தில் வலியுறுத்தல்!

*திருச்சி, ஆக. 30-*

தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையின் (தொ.மு.ச.) தலைமைச் செயற்குழு கூட்டம், அச்சங்கத்தின் பொதுச்செயலாளர் சண்முகம் தலைமையில் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில், திமுக அரசால் அறிவிக்கப்பட்ட ‘உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை’ த.வெ.க. அரசு சீர்குலைக்கக் கூடாது; தமிழக அரசை விமர்சிப்பவர்கள் மீது அடக்குமுறையை ஏவி பழிவாங்கும் போக்கை த.வெ.க. அரசு கைவிட வேண்டும்; கொள்கைத் தெளிவற்ற முறையில் நிதிநிலை அறிக்கையை வெளியிட்டு, திமுக மீது புழுதிவாரித் தூற்றுவதையே வாடிக்கையாகக் கொண்டுள்ள த.வெ.க. அரசுக்குக் கடும் கண்டனம் என்பன உள்ளிட்ட 35 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் சண்முகம் கூறியதாவது:

மத்திய அரசும், மாநில அரசும் தொடர்ந்து தொழிலாளர்கள் மீது அடக்குமுறையை ஏவி, அவர்களின் உரிமைகளைப் பறித்து வருகின்றன. அதனை எதிர்கொள்ளும் வகையில் அனைவரும் செயல்பட வேண்டும் எனச் செயற்குழுக் கூட்டத்தில் தொ.மு.ச. நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொண்டால் மட்டுமே மத்திய அரசால் 4 தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை அமல்படுத்த முடியும். ஆனால், பெரும்பாலான மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளாத நிலையிலும், அதனைச் செயல்படுத்த மத்திய அரசு அவசரம் காட்டுகிறது. மத்திய அரசு இந்த 4 தொழிலாளர் சட்டத் தொகுப்புகளையும் செயல்படுத்தக் கூடாது.

தி.மு.க. ஆட்சியில் ஓய்வூதியர்களுக்கு ‘உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்’ செயல்படுத்தப்பட்டது. ஆனால், தற்போதுள்ள த.வெ.க. அரசு நிதி இல்லை எனக் கூறி அத்திட்டத்தைப் புறக்கணிக்கிறது. அரசு உடனடியாக உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

தமிழக அரசு அனைத்துத் துறைகளிலும் தனியார்மயத்தைப் புகுத்துகிறது. தனியார் மயம் வந்தால் இடஒதுக்கீடு பறிபோகும். அரசுத் துறையாக இருந்தால் மட்டுமே இடஒதுக்கீடு பின்பற்றப்பட்டு அனைத்துத் தரப்பினருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும். எனவே, அனைத்துத் துறைகளிலும் தனியார்மயமாக்கும் போக்கை தமிழக அரசு கைவிட வேண்டும்.

தி.மு.க. ஆட்சியில் பல்வேறு சாதனைத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அந்த சாதனைகளை மறைக்கும் முயற்சியில்தான் த.வெ.க. அரசு ஈடுபட்டு வருகிறது. ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமிப்பதை நாங்கள் எப்போதும் எதிர்ப்போம். திமுக ஆட்சியிலும் அதை எதிர்த்தோம்; தற்போதைய ஆட்சியிலும் அதை எதிர்க்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

---


### வெளி மாநிலங்களில் Party Fund-ஐ பதுக்கி வைத்து ரீல் தயாரித்து

# பிரதமர் தேர்தல் பிரச்சாரம் செய்வதுதான் தூய ஆட்சியா CM Sir?

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

*நெல்லை, ஆக. 30-*

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:-



கடந்த தி.மு.க. ஆட்சியில் அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு கொடுக்க முற்படுவதாக பொய்யான தகவலை த.வெ.க.தேர்தல் பிரச்சாரம் மேடையில் முழக்கமிட்டு வந்த நடிகர் விஜய் தற்போது “முதல்வர் விஜய்யாக” மாறி இருப்பது மட்டுமே மாநிலத்தில் நிகழ்ந்த ஒரே மாற்றம்.

தற்போது ஆட்சிக்கு வந்த முதல்வர் டாஸ்மாக், துப்புரவு பணி, குடிநீர் விநியோகம், அரசு பேருந்து ஓட்டுனர் நடத்துனர் பணி தேர்வு, உத்தரபிரதேச நிறுவனத்திற்கு அனுமதி, தனியார் பங்களிப்புடன் மின்சாரப் பேருந்துகள் கொள்முதல் செய்து போக்குவரத்து துறைக்கு மூடுவிழா என எல்லாமே தனியாருக்கு, உங்கள் திரைப்படத்தை கூவி கூவி விற்பது போல் விற்று பல ஆயிரம் கோடி ரூபாய் கொள்ளை அடிக்கும் ஆட்சியாக செயல்படுத்துவது உண்மை தானே CM Sir?

பாட்டிலுக்கு 10 ரூபாய் என்று உங்கள் சொகுசுப் பேருந்தின் மேல் ஏறி நின்று ஆடிப்பாடிய விஜய் அவர்களே! தற்போது முதல்வரானதும் பாட்டிலுக்கு 20 ரூபாய் மற்றும் விவசாயிகளிடம் நெல் மூட்டைக்கு 60 ரூபாய் என்று வசூலிக்கும் பணம் உங்கள் பார்ட்டி பண்டுக்கு தானே வருகிறது CM Sir?

தனக்கு நெருக்கமாக இருக்கும் அண்டை மாநிலத்தைச் சேர்ந்த தேர்தல் வியூக ஆலோசகர்கள், திரைப்பட இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோரிடம் உங்களுடைய மொத்த நிர்வாகமும் விலை பேசப்பட்டு தனியார் மயமாக்கி பல ஆயிரம் கோடி ரூபாய் வெளி மாநிலங்களில் Party Fund பதுக்கி வைத்து ரீல் தயாரித்து பிரதமர் தேர்தல் பிரச்சாரம் செய்வதுதான் தூய ஆட்சியா CM Sir?

இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலை தளத்தில் கூறியுள்ளார்.

---

# மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி அறிவிப்பு!

*மதுரை, ஆக. 30 -*

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (30.08.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 05.30 மணி அளவில் அண்ணாநகர் ட்வின்ஸ் மஹாலில், நடைபெற இருப்பதால் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



பொருள்:

கழக தலைவர் அறிவிப்பின்படி, கழக மறுசீரமைப்புக்குழு வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில் பகுதி கழக வட்ட கழக அமைப்புகளை உருவாக்குதல் சம்பந்தமாக.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற தொ.மு.ச. பேரவையின் தலைமை செயற்குழு கூட்டத்தில் பேரவை பொதுச் செயலாளர் Ex M P சண்முகம் உரையாற்றினார். அவருடன் பேரவை தலைவர் நடராஜன் மற்றும் சங்க நிர்வாகிகள் முன்னாள் எம்.எல்.ஏ. செங்குட்டுவன், வள்ளுவன், தனசேகர், குணசேகர், ஜோசப் நெல்சன், வேலுச்சாமி, தர்மன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி சண்முகபுரம் கபடி கிளப் தாமோதரன் நகர் இளைஞரணி சார்பாக நடத்தப்பட்ட முருகேசன் நாடார் நினைவு மாநில அளவிலான கபடி போட்டியை தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திருமதி பி. கீதாஜீவன் துவக்கி வைத்தார். உடன் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்த சேகரன் மற்றும் பகுதி கழகச் செயலாளர்கள் மாநகர கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.